# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2083/35 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10

*2083/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவிலக்கம் பீவி 101137 இனைக் கொண்டதும் எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனி தொடர்பில் மேற்சொல்லப்பட்ட 2016, திசெம்பர் 02 ஆந் திகதிய 1995/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அதில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான II ஆம் அட்டவணையில் முறையே I ஆம் மற்றும் II ஆம் நிரலின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளை அதன் I ஆம் நிரலில் காணப்படும் "இலத்திரனியல் மற்றும் பொறியியல் முகாமையிலான பொறியியல் சிறப்பு விஞ்ஞான இளமாணி" என்னும் பதிவினை உடனத்து II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,
உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, ஓகத்து 08.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இலத்திரனியல் தொழில்நுட்பவியல் சிறப்பு இளமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களை அனுமதிக்கின்றபோது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையிலான அமர்வில் பௌதிக விஞ்ஞானப் பாடத்திட்டத்தில் அல்லது உயிரியல் விஞ்ஞானப் பாடத்திட்டத்தில் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்திட்டத்தின் குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை நுழைவுத் தகைமைகளாக அல்லது அதற்குச் சமமான தகைமைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.


1A - PG 4163 — 507 (2018/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br><br>*பட்டம்* | *நிரல் II*<br><br>*பட்டத்திற்கான சுருக்கீடு* |
|---|---|
| இலத்திரனியல் தொழில்நுட்பவியல் சிறப்பு இளமாணி | பி ரெக் (சிறப்பு) இலத்திரனியல் |

*08-867*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.